# கண்ணம்பாளையம் பேரூராட்சி அலுவலகம்
## மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்: 858/2010 நாள்: 06.12.2010

1. வேலைக்கான டெண்டர் ஷெட்யூல்கள் 14.12.2010-ம் தேதி மாலை 3.00 மணி வரை அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2. டெண்டர்கள் கண்ணம்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் அவர்களிடமாவது அல்லது அவர்களிடம் உத்தரவு பெற்றவர்களிடமாவது 15.12.2010–ம்..தேதி மாலை …3.00. மணிக்குள்ளாக கொடுக்க வேண்டும்.

3. டெண்டர்கள் 15.12.2010–ம் தேதி மாலை 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித் தொகையினை செலுத்தி அசல் ரசீதினை இணைத்து மூடிமுத்திரையிடப்பட்ட உரையில் வரிசை எண், பணியின் விவரம் தனித்தனியாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. எந்த டெண்டர்களையும் யாதொரு காரணமும் காட்டமல் தள்ளுபடி செய்யவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. வேலைகள் கிடைக்கப் பெறாத ஒப்பந்ததாரர்களுக்கு பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்குப் பிறகு டேவணித் தொகை திருப்பி வழங்கப்படும்.

6. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சிமன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

7 ஒப்பந்தப்புள்ளிகள் சதவிகிதம் விதிகளுக்கு குறைவாக அளிக்கப்பட்டிருந்தால் உரிய கூடுதல் டேவணித் தொகையை செலுத்திய பின்னரே பணிக்கான உத்திரவு வழங்கப்படும்.

8. வேலைக்கான உத்தரவு கிடைக்கப்பெற்றதும் ரூ. 20/–க்கான முத்திரை தாளில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தபத்திரம் செயல் அலுவலருக்கு எழுதி தாக்கல் செய்யப்படவேண்டும்.

9. வேலைக்கான உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் உத்தரவில் குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் பணி முடித்து அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

10. வேலை துவங்கும் பொழுதும், வேலை நடைபெற்றிருக்கும் பொழுதும், பணி முடிவடைந்த நிலையிலும் புகைப்படம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

11. வேலை நடக்கும் இடத்தில் வேலைகள் குறித்த விபரம் அடங்கிய பெயர்ப்பலகை அமைக்கப்பட வேண்டும்.

12. பணிகள் உரிய காலத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும். நிபந்தனைகளும் செயல் அலுவலர் மற்றும் உயர் அலுவலர்களால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு பணிகள் செய்யப்பட வேண்டும்.

13. சாலை பணிகளுக்குத் தேவையான தார் , கட்டுமானப் பணிக்கு சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் துறை மூலம் வழங்கப்படமாட்டது.

14. வேலையை அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் வேறு யாருக்கும் மறு ஒப்பந்தம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தது தெரிய வந்தால் அவ்வேலைக்கான உத்திரவு ரத்து செய்வதுடன் அதனால் ஏற்படும் இழப்புக்களை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

15. நடைபெறும் பணியின் மதிப்பில் வருமான வரி 2 % + மேல்வரி 10 % + விற்பனைவரி 2% + மேல்வரி 5% ,கல்வி வரி 0.04 %, VAT – 2 % மற்றும் 0.3 சதவிகிதம் கட்டுமானத் தொழிலாளர்கள் நல நிதியும் பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்தப்படும்.

16. கூடுதல் விபரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

17. வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்கள் அனைத்திற்கும் இனம் வாரியாக ஒப்பந்ததாரர் தன் சொந்த செலவில் தரச்சான்று பெற்று இணைக்கப்பட வேண்டும்.

18. மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணைய தளங்களில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.

* இணையதள முகவரி : 1.www.tenders.tn.gov.in
2.www. townpanchayats.tn.gov.in/dtp

**கேளிக்கை வரி மானியம் 2010–2011**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | டேவணி | டெண்டர் முறை | ஷெட்யூல் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | 11–வது வார்டு கண்ணம்பாளையம் – பீடம்பள்ளி ரோடு மயான மேம்பாடு செய்தல் | ரூ. 8,00,000/– | 2% | ஷெட்யூல் முறை | 1560/– |

பெறுநர்

இப்பேரூராட்சியில் பதிவு செய்த தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள்.

நகல்

1) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கோவை மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) உதவி செயற்பொறியாளர் ,பேரூராட்சிகள் துறை, கோவை மண்டலம்
3) உதவி பொறியாளர் , பேரூராட்சிகள்
4) கோவை மண்டலத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சிகளுக்கும்
5) அலுவலக விளம்பர பலகைக்கு.

ஒம் (********)
செயல் அலுவலர்
கண்ணம்பாளையம் பேரூராட்சி.

கண்ணம்பாளையம் பேரூராட்சி.
நாள்: 06.12.2010.